அ.வ எண்130/2021 வேலுசாமி (வாசா1) தேதி:01.08.2023

1,2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

பிரதிவாதிகள் கொடுத்த பதில் அறிவிப்பிற்கு நாங்கள் மீண்டும் பதில்கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவாசொத்திற்கு பட்டா பிரதிவாதிகள் பெயரில் இருக்கிறது என்றுசொன்னால் சரியல்ல. சாட்சி மீண்டும்சொல்கிறார் வாதி மற்றும் பிரதிவாதிகள் பெயரில் கூட்டாக உள்ளது. பிரதிவாதிகள் ஆண்டி என்பவரின் பிள்ளைகள் என்றுசொன்னால் சரிதான். என்னிடம்காட்டப்படும் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரைய ஆவணங்களில் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் பெயர் இல்லை என்றுசொன்னால் அதுபற்றி எனக்குதெரியாது. நான் யாருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் முத்துராமலிங்கம், ராமசந்திரன் மற்றும் சண்முகத்தாய் ஆகியோர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 மற்றும் 2 கிரைய ஆவணங்களில் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் கட்சி கிடையாது என்றும் வேண்டுமென்றே பொய்யாக தெரியாது என்று சாட்சியமளிக்கிறேன் என்றுசொனன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் உண்மையான பெயர் குமரைய்யா என்பதை ஒத்துகொண்டு வழக்குதாக்கல்செய்துவிட்டு தற்போது பெயரை மாற்றி சொல்கிறேன் என்றால்சரியல்ல. 1ம்பிரதிவாதி 1972 லும், 3ம்பிரதிவாதி சண்முகத்தாய் 1975 லும் பிறந்தார் என்றுசொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி 1 மற்றும் 3 பிரதிவாதிகள் வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களுக்கு முன்னரே பிறந்துவிட்டார்கள் என்றுசொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவாசொத்து ஆண்டிகோனார் என்பவருக்கு சுயசொத்தா? அல்லது பரம்பறை சொத்தா? என்றால் சுயம் என்று வாயில் தவறாக வந்துவிட்டது அது எப்படிப்பட்ட சொத்து என்று எனக்கு தெரியாது. கிரையம் வாங்கும்போது ஆண்டிகோனாருக்கு எத்தனை குழந்தைகள் என்று நான் விசாரிக்கவில்லை.

கு.வி. தொடர்ச்சிக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R.Rathinavel Pandian
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி